## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

26–03–2025 நிகழ்வுகள்

**1. மக்களவை: ஒன்றிய அரசு தாய் பறவை போல் நடந்து கொள்ள வேண்டும்!**

**திமுக எம்.பி. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் கோரிக்கை!**



தமிழ்நாட்டிற்கு கோதுமை அளவை உயர்த்தி வழங்க வேண்டும் என நேர மில்லா நேரத்தில் மாநிலங்களவையில் திமுக எம்.பி. கே.ஆர். என். ராஜேஷ்குமார் கோரிக்கை வைத்துள்ளார்.

அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் கோதுமை பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரத் தேவையை கருத்தில் கொண்டு தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் ஊட்டச்சத்து மற்றும் வருகையை மேம்படுத்த காலை சிற்றுண்டி உணவுத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் தற்போது 8,576.02 மெட்ரிக் டன் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. அதே நேரத்தில் மாநிலத்தில் கோதுமை நுகர்வு மாதத்திற்கு 23,000 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலம் இல்லையென்பதால், அது இந்திய உணவுக் கழகத்தின் விநியோகத்தைச் சார்ந்துள்ளது.

கோதுமை ஒதுக்கீட்டை மாதத்திற்கு 23,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ஏற்பாடு செய்யுமாறும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் இது சாத்தியமில்லை என்றால், திறந்த சந்தை விற்பனைத் திட்டத்தின் (OMSS) கீழ் 15,000 டன் கோதுமையை வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறும் ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்

இந்த ஒதுக்கீடு அதிகரிப்பு தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் கோதுமை தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், மாநில மக்களுக்கு மலிவு விலையில் இந்த அத்தியாவசியப் பொருள் கிடைப்பதை உறுதி செய்யும். இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தமிழ்நாட்டின் மீது இந்தியைத் திணித்து, மாநிலத்தின் நிதியை நிறுத்தி வைக்கும் ஒன்றிய அரசின் முடிவும், தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையும் தமிழ்நாட்டின் உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தையும் குறைக்கும் செயலாகும்.

ஒன்றிய அரசு ஒரு தாய்ப் பறவையாக இருக்க வேண்டும், ஒவ்வொரு மாநிலத்தையும் சமமாக மதிக்க வேண்டும் மற்றும் சமமான நிர்வாகத்தின் மூலம் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

**2. மக்களவை: குஜராத்தில் புதிய கூட்டுறவுக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் எதிர்ப்பு தெரிவித்து**

**ஈரோடு திமுக எம்.பி. கே.ஈ.பிரகாஷ் உரை**



கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலாக இந்த மசோதா (Bill) முதலில் என்னிடம் வந்தபோது, இதன் பெயர் "திரிபுவன் சாகரி பல்கலைக்கழக மசோதா (பில்)" என்று இருந்ததால், எனக்கு இது புரியவில்லை. பிறகு, நான் இந்த வார்த்தையின் அர்த்தத்தை தேடிப் பார்க்க வேண்டியிருந்தது. "சாகரி" என்றால் கூட்டுறவு என்று பொருள் என்பதை நான் பிறகு அறிந்துகொண்டேன்.

இந்த மசோதா, கூட்டுறவுத் துறையில் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக ஒரு புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பல்கலைக்கழகம், "திரிபுவன் சாகரி பல்கலைக்கழகம்" என்று பெயரிடப்படும், மேலும் இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மசோதா இந்த பல்கலைக்கழகத்தை "கூட்டுறவு கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் சிறப்பு நிறுவனம்" என்று விவரிக்கிறது.

தமிழ்நாடு ஏற்கனவே பல தசாப்தங்களாக கூட்டுறவு கல்வியில் முன்னோடியாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு பயிற்சி நிறுவனம், கூட்டுறவு வங்கி, கிராமப்புற கடன் மற்றும் நிதி குறித்த கல்வியை வழங்குகிறது.

பண்பாடு மற்றும் பாரம்பரியத்திற்கு பெயர் பெற்ற எங்கள் மாநிலம், கூட்டுறவுத் துறையிலும் ஒரு முன்னோடியாக திகழ்கிறது. 1.60 லட்சத்திற்கும் அதிகமான கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 2 கோடியைத் தாண்டிய உறுப்பினர்கள் கொண்ட தமிழ்நாடு, இந்தியாவில் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளது. இந்த கூட்டுறவு சங்கங்கள் விவசாயம், பால், கைத்தறி, மீன்வளம், வீட்டுவசதி மற்றும் நுகர்பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளில் செயல்பட்டு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் பெரும் பங்களிப்பை அளித்துள்ளது.

ஆவின்: பால் கூட்டுறவின் பொற்காலம்

தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறையின் மிகப் பெரிய பெருமை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு (TCMPF), அல்லது ஆவின் என கூறபடும். 6,000 கோடிக்கும் அதிகமான வருடாந்திர வருவாய் கொண்ட நிறுவனம் ஆகும், இந்தியாவின் மிகவும் வெற்றிகரமான பால் கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்றாகும்.

ஈரோடு நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட மொடக்குறிச்சி, ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, காங்கேயம், தாராபுரம், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் அதிகம் உள்ள நிலையில் ஈரோடு மாவட்டத்தின் சின்னியம்பாளையத்தில் பிறந்து, கூட்டுறவுத் துறையில் தனது அரிய பங்களிப்புகளுக்காக அறியப்பட்ட எஸ்.கே. பரமசிவம் அவர்களை நினைவுகூர விரும்புகிறேன். ஆவின் பால் கூட்டுறவு சங்கத்தை நிறுவுவதில் முக்கிய பங்காற்றிய இவர், "பால்வளத்த தந்தை" என்று அழைக்கப்பட்டார் மற்றும் 2010-ல் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திடமிருந்து டாக்டர். குரியன் விருதை பெற்றார். இவரது பணிகள், தமிழ்நாட்டின் பால் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வந்தன.

டாக்டர் வர்கீஸ் குரியன் அவர்கள் NDDB தலைவராக இருக்கும்போது 1979ஆம் ஆண்டில் ஈரோடு வருகை தந்து 5000 விவசாயிகளை சந்தித்து உரையாற்றிய பெருமை ஈரோடு ஆவினுக்கு உண்டு.

தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), பால் மற்றும் மீன்வள மேலாண்மையில் மாணவர்களுக்கு நீண்ட காலமாக பயிற்சி அளித்து வருகிறது.

புனேவில் உள்ள வைகுந்த் மேத்தா தேசிய கூட்டுறவு மேலாண்மை நிறுவனம் (VAMNICOM) 1964 முதல் செயல்பட்டு வருகிறது, மற்றும் சிறப்பு கூட்டுறவு மேலாண்மை படிப்புகளை வழங்குகிறது.

எனவே, இந்த பல்கலைக்கழகத்தில் "புதியது" என்ன?

இந்த நிறுவப்பட்ட நிறுவனங்களை அங்கீகரித்து வலுப்படுத்துவதற்கு பதிலாக, கூட்டுறவு இயக்கத்தின் முன்னணியில் இருந்த மாநிலங்களை புறக்கணிக்கும் வகையில், ஒன்றிய அரசு குஜராத்திற்கு வளங்களை திருப்பி விடுகிறது.

நாடு தழுவிய கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதாக இந்த மசோதா கூறுகிறது. ஆனால், அதன் வடிவமைப்பு பெரிதும் குஜராத்தை மையமாகக் கொண்டு உள்ளது. குஜராத்தில் உள்ள IRMA (இன்ஸ்டிடியூட் ஆஃப் ரூரல் மேனேஜ்மென்ட் ஆனந்த்) பல்கலைக்கழகமாக முன்மொழியப்பட்டுள்ளது, மற்ற மாநிலங்களில் துறை சார்ந்த பள்ளிகள் நிறுவப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகள் -பால் பண்ணை, மீன்வளம், சர்க்கரை, வங்கி, கிராமப்புற கடன், கூட்டுறவு நிதி, சட்டம், தணிக்கை மற்றும் பல மாநில கூட்டுறவுகள் போன்ற துறைகளில் அமைக்கப்படும். ஆனால், இந்த வளாகங்கள் எங்கே அமையும்? பால் பண்ணை மற்றும் வங்கி போன்ற கூட்டுறவுத் துறைகளில் தமிழ்நாட்டின் வரலாற்றுத் தலைமை இருந்தபோதிலும், இந்த மசோதா தமிழ்நாட்டில் எந்தவொரு கூட்டுறவு கல்வி மையம் அமைப்பதற்கான உத்தரவாதம் அளிக்கவில்லை.

சுமார் 6,000 கோடி வருவாய் ஈட்டிக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் ஆவின் பால் கூட்டுறவு, இந்தியாவின் மிகப்பெரிய அரசு நடத்தும் கூட்டுறவுகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு மாநில உச்ச கூட்டுறவு வங்கி (TNSC வங்கி) 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் 4,523 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடுகிறது, இது லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நிதி வசதிகளை வழங்குகிறது (TNSC வங்கியின் ஆண்டு அறிக்கை, 2023).

கடந்த 2006ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திமுக ஆட்சி அமைந்த உடன் அன்றைய எங்கள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் விவசாயிகளின் கூட்டுறவு வாங்கி கடன்கள் அனைத்தும் சுமார் 7000 கோடி ருபாய் தள்ளுபடி செய்து விவசாயிகளை காப்பாற்றினார்.

ஆனால் உங்களுடைய ஒன்றிய மாண்புமிகு மோடி அவர்களின் அரசு விவசாயிகளின் கடன் தள்ளுபடி என்று அறிவிப்பை நிதிநிலை அறிவிப்பில் இடம்பெறவில்லை.

இன்றைய எங்களது தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வட்டியில்லா கடன் விவசாயிகளுக்கு கூட்டுறவு துறை மூலமாக இன்று வரை வழங்கிக் கொண்டு வருகிறார்.

எனவே, அரசாங்கம் உண்மையிலேயே கூட்டுறவு கல்வியை வளர்க்க விரும்பினால், குஜராத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தை நம்பியிருக்க தமிழ்நாட்டை கட்டாயப்படுத்துவதற்குப் பதிலாக, தற்போது தமிழ்நாட்டில் உள்ள இந்த நிறுவனங்களில் முதலீடு செய்யவும்.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழு, ஆசிரிய மற்றும் ஆராய்ச்சித் தலைமை, ஆராய்ச்சி முன்னுரிமைகளுக்கான முடிவெடுக்கும் செயல்முறை ஆகியவற்றில் தமிழ்நாடு மற்றும் பிற முக்கிய கூட்டுறவு சார்ந்த மாநிலங்களின் மாநில பிரதிநிதித்துவத்தை உத்தரவாதம் செய்ய மசோதா தவறிவிட்டது.

அதன் கொள்கைகள், பாடத்திட்டம் மற்றும் தலைமை ஒரு மாநிலத்தால் கட்டுப்படுத்தப்பட்டால் இது எப்படி ஒரு தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகமாக இருக்க முடியும்? தமிழ்நாட்டின் கூட்டுறவு பால்வளம், வங்கி மற்றும் மீன்வள மாதிரிகள் குஜராத்திலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. நமக்கு தேவை உள்ளூர்மயமாக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி மையங்கள், ஒரே மாதிரியான குஜராத் மாதிரி அல்ல.

இந்த மசோதா, கூட்டுறவு முறையின் உள்ளூர் தலைமையின் கீழ் பாரம்பரியமாக செழித்து வளர்ந்த ஒரு துறையின் மீது, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்கான மற்றொரு முயற்சியை எடுத்துக்காட்டுகிறது.

குஜராத்தின் IRMA வளாகத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவுவதன் மூலம், இந்த மசோதா தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களை ஓரங்கட்டக்கூடும், இவை அனைத்தும் குறிப்பிடத்தக்க கூட்டுறவில் தடம் பதித்துள்ள மாநிலங்கள் ஆகும்.

2022 ஆம் ஆண்டிற்கான தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) தரவுகளின்படி, தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் இணைந்து இந்தியாவின் ஒட்டு மொத்த கூட்டுறவுத் துறை வருவாயில் 30% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றன.

கூட்டுறவு கல்வியில் முன்னணியில் இருக்கும் ஏராளமான மாநில அளவிலான கூட்டுறவு பயிற்சி மையங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன. கூட்டுறவு இயக்கத்தின் அடிமட்ட உணர்வை நீண்டகாலமாக நிலைநிறுத்தி வரும் சிறப்பு நிறுவனங்களுக்கு இந்தியா தாயகமாக உள்ளது. எடுத்துக்காட்டாக,

கூட்டுறவு மேலாண்மை நிறுவனம், போபால் (மத்திய பிரதேசம்), கூட்டுறவு நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் தலைமைத்துவத்தில் விரிவான திட்டங்களை வழங்குகிறது.

திரிபுவன் சாகரி பல்கலைக்கழக மசோதாவின் முக்கிய குறைபாடுகளில் ஒன்று, -பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழக்கு தீர்ப்பு குறித்து விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு ஆகும். கிளாஸ் 41(3)-இன் படி, "வழக்கு தீர்ப்பு அமைப்பின் முடிவே இறுதியானது, மேலும் அதற்கு எதிராக எந்த சிவில் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியாது" என்று கூறப்பட்டுள்ளது. இந்த விதி, ஊழியர்களுக்கு நீதி கேட்கும் உரிமையை கட்டுப்படுத்துகிறது, மேலும் இது இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளான அதிகாரம் 226 மற்றும் 32-ஐ மீறுகிறது. இந்த உரிமைகள், எந்தவொரு நபருக்கும் நீதிமன்றத்தில் நீதி கேட்கும் உரிமையை உறுதி செய்கின்றன.

மேலும், வழக்கு தீர்ப்பு அமைப்பில், ஒரு உறுப்பினர் எக்ஸிகியூட்டிவ் கவுன்சிலால் நியமிக்கப்படுகிறார், மற்றொரு உறுப்பினர் ஊழியரால் நியமிக்கப்படுகிறார், மற்றும் மூன்றாவது உறுப்பினர் (சுயேச்சையான உறுப்பினர்) மீண்டும் எக்ஸிகியூட்டிவ் கவுன்சிலால் நியமிக்கப்படுகிறார். இது, மசோதவின் நியாயத்தன்மையை குறைக்கிறது, ஏனெனில் எக்ஸிகியூட்டிவ் கவுன்சில் அதிகாரிகள் வழக்கு தீர்ப்பு அமைப்பில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றனர்.

இந்த குறைபாடுகளை கருத்தில் கொண்டு, மசோதாவை மீண்டும் முறையாக பகுப்பாய்வு செய்ய வேண்டும். ஊழியர்களின் நீதி கேட்கும் உரிமை மற்றும் நியாயமான வழக்கு தீர்ப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், இந்த மசோதா மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு ஒரு நினைவூட்டலை தெரிவிக்க விரும்புகிறேன்: குஜராத்தைத் தவிர்த்து மற்ற மாநிலங்களையும் கவனிக்க வேண்டும். நீங்கள் இந்தியாவின் பிரதமர், குஜராத்தின் முதல்வர் அல்ல. இந்த நாட்டின் அனைத்து மாநிலங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கும் நீங்கள் பொறுப்பானவர். எனவே, அனைத்து மாநிலங்களுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களே தமிழ்நாடு இந்தியாவிலேயே தாங்கி கொண்டுள்ளது, இந்திய வரைபடத்தில் மட்டுமல்ல நிதியிலும் தான்.

புதியதாக ஒன்றிய அரசு கொண்டுவரும் திட்டங்களை தமிழ்நாட்டில் தொடங்கி பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள், அது இந்தியாவிற்க்கே ஒரு முன்னுதாரணமாக இந்திய திருநாட்டின் வளர்ச்சிக்கு சிறப்பாக அமையும். கூட்டுறவே நாட்டு உயர்வு. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.

**3. மக்களவை: தமிழ்நாட்டில் அனைவருக்கும் 5G தொழில்நுட்பம்!**

**தென் சென்னை திமுக எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை**



தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றிய அரசு 5G தொழில்நுட்பத்தை வழங்குகிறதா என்பது குறித்து தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் இன்று கேள்வி கேட்டுள்ளார். BSNL மற்றும் பிற தனியார் சேவை நிறுவனங்கள் வழங்கும் 5G சேவைகளால் மாநிலத்தில் ஏற்படும் நன்மைகள் குறித்து ஏதேனும் ஆய்வுகள் நடத்தப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றும் 5G சேவைகளின் கீழ் மொத்தமாக பயனடையக்கூடிய மக்கள் தொகையின் எண்ணிக்கை விவரங்களையும் வழங்க அவர் கோரியுள்ளார்.

**4. மக்களவை: இரயில்வே தேர்வுகள் ரத்து! காரணம் என்ன?**

**சேலம் திமுக எம்.பி. செல்வகணபதி கேள்வி**



மார்ச் 4, 2025 வரை இறுதி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாத குரூப் 'சி' பதவிகளுக்கான நிலுவையில் உள்ள அனைத்து தேர்வுகளையும் இரயில்வே துறை ரத்து செய்துள்ளதை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் சேலம் மக்களவை திமுக உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:

இத்தேர்வுகள் ரத்து செய்யப்பட்டதற்கு அண்மையில் தேர்வு நடத்துவதில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள்தான் காரணம் என சொல்லப்படுவது உண்மை என்றால் அதன்மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

உத்தரபிரதேசத்தில் கிழக்கு மத்திய ரயில்வேயின் 26 ரயில்வே அதிகாரிகள் துறைத் தேர்வின் வினாத்தாள்களை கசியவிட்டதாகக் கூறி சிபிஐ கைது செய்த அதிகாரிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

இரயில்வேயில் உள்ள அனைத்து குரூப் "சி" பதவிகளையும் நிரப்ப அரசு தீர்மானித்துள்ள காலக்கெடு யாது?

இரயில்வேதுறை சார்ந்த அனைத்து பதவி உயர்வு தேர்வுகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட கணினி அடிப்படையிலான தேர்வுகளாக நடத்தும் நோக்கில் இரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தை இரயில்வேதுறை இணைத்துள்ளது குறித்த விவரங்கள் யாவை?

இரயில்வே பாதுகாப்பு தொடர்பான அனைத்து பதவிகளிலும் காலியாக உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றை நிரப்ப அரசு முடிவுசெய்துள்ள காலக்கெடு என்ன?

**5. மக்களவை: அரிசி, பருப்பு மற்றும் உணவுப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு.. பொது விநியோகத்துறையின் நடவடிக்கை என்ன?**

**காஞ்சிபுரம் திமுக எம்.பி. ஜி.செல்வம் மற்றும் திருவண்ணாமலை எம்.பி. சி.என்.அண்ணாதுரை கேள்வி**





பொது விநியோக முறை மூலம் விநியோகிக்கப்படும் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை செறிவூட்டுவதற்கு பின்பற்றப்படும் தரநிலைகள் குறித்து மக்களவையில் காஞ்சிபுரம் திமுக எம்.பி. ஜி. செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த உணவுப் பொருட்களுக்கு அரசாங்கம் முறையான தர சோதனைகளை நடத்துகிறதா? அப்படியென்றால் அதன் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விவரங்களையும் வெளியிட வேண்டும்.

தானியங்களை செறிவூட்டுவதன்மூலம் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் குறைந்ததை உறுதிசெய்ய அரசு மேற்கொண்ட ஆய்வுகள் குறித்து அறிக்கை வெளியிட வேண்டும்.

ஆய்வுகளின் அடிப்படையில் பொது விநியோக முறை மூலம் விநியோகிக்கப்படும் உணவின் ஊட்டச்சத்து தரத்தை மேலும் மேம்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் குறித்தும் அரசு அறிக்கை வெளியிட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

---

### தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# இராமநாதபுரம் மாவட்டத்தில் - அனைத்து ஒன்றியங்களிலும் ஆர்ப்பாட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!



*இராமநாதபுரம், மார்ச் 28-*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, துணை முதலமைச்சர், அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நாளை (29.03.2025 சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியக் கழகங்களிலும் கீழ்க்கண்டவாறு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

ஆகவே சம்மந்தப்பட்ட ஒன்றியக் கழக செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறு, மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர். கழக, கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் அவரவர் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலை (MGNREGA) திட்ட பயனாளிகளுடன் சேர்ந்து திரளாக கலந்துகொண்டு ஒன்றிய பா ஜ க அரசுக்கு எதிரான கண்டனத்தை பதிவு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் வருமாறு:-

இராமநாதபுரம் தெற்கு ஒன்றியம் சித்தார்கோட்டை, இராமநாதபுரம் வடக்கு ஒன்றியம் தேவிபட்டினம், மண்டபம் மேற்கு ஒன்றியம் இரட்டையூரணி பேருந்து நிலையம், மண்டபம் கிழக்கு ஒன்றியம் மானாங்குடி, மண்டபம் மத்திய ஒன்றியம் என்மன மங்கொண்டான், திருப்புல்லாணி கிழக்கு ஒன்றியம் திருப்புல்லாணி, திருப்புல்லாணி மேற்கு ஒன்றியம் திரு உத்திரகோச மங்கை, பரமக்குடி கிழக்கு ஒன்றியம் பாம்பூர், பரமக்குடி மேற்கு ஒன்றியம் பார்த்திபனூர், நைனார் கோவில் கிழக்கு ஒன்றியம் பாண்டியூர், நயினார் கோவில் மேற்கு ஒன்றியம் நயினார்கோவில், முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியம் கீழக்குளம், முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றியம் முதுகுளத்தூர்,

முதுகுளத்தூர் மத்திய ஒன்றியம் கீரனூர், கமுதி வடக்கு ஒன்றியம் நாராயணபுரம் கோட்டைமேடு, கமுதி தெற்கு ஒன்றியம் டிவி.எஸ் புறம், கமுதி மத்திய ஒன்றியம் செங்கப்படை, போகலூர் கிழக்கு ஒன்றியம் சத்திரக்குடி, போகலூர் மேற்கு ஒன்றியம் மஞ்சூர்,

ஆர்.எஸ்.மங்கலம் வடக்கு ஒன்றியம் சனவெளி, ஆர்.எஸ் மங்கலம் தெற்கு ஒன்றியம் உப்பூர், திருவாடனை தெற்கு ஒன்றியம் பாசிப்பட்டணம், திருவாடனை வடக்கு ஒன்றியம் மாங்குடி, திருவாடானை மத்திய ஒன்றியம் திருவாடனை, கடலாடி தெற்கு ஒன்றியம் ஓரிவயல், கடலாடி வடக்கு ஒன்றியம் ஆப்பனூர், சாயல்குடி மேற்கு ஒன்றியம் எஸ். தரைக்குடி, சாயல்குடி கிழக்கு ஒன்றியம் மாரியூர், ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என

இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

### தமிழ்நாட்டின் நிதி ரூ.4034 கோடியை தர மறுக்கின்ற ஒன்றிய அரசைக் கண்டித்து

# தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



*தூத்துக்குடி, மார்ச் 28-*

ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு நூறு நாட்கள் வேலை வழங்க வேண்டும் என்ற நிலையில் ஒன்றிய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஊரக பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான ஊதியம் ஒன்றிய அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய தொகை ரூ.4034 கோடி நிலுவையில் உள்ளது. பலமுறை வலியுறுத்தியும் ஒன்றிய அரசு வழங்க மறுக்கிறது.

இச்செயலை கண்டித்து அனைத்து ஒன்றிய பகுதிகளிலும் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டுமென தி.மு.க தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அறிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் குரும்பூர், தெற்கு ஆத்தூர், அம்மன்புரம், பரமன்குறிச்சி, மெஞ்ஞானபுரம் ஆகிய ஊர்களிலும், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் பழையகாயல், நட்டாத்தி, பேரூர், செய்துங்கநல்லூர், பேய்குளம், தைலாபுரம், தட்டார்மடம், முதலூர் ஆகிய ஊர்களிலும், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர், புதுக்கோட்டை, தாளமுத்துநகர், தளவாய்புரம், வசவப்பபுரம், தெய்வச் செயல்புரம் ஆகிய ஊர்களிலுமாக 20 இடங்களில் நாளை (29.03.2025) காலை 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இப்போராட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் கிளை, வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள கழக செயல் வீரர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.